# BSNL ஊழியர் சங்கம்
# தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:37** **தேதி:-06.05.2015**

## தேங்கியுள்ள பிரச்சனைகளின் மேல் நடைபெற்ற பேச்சு வார்த்தை

அன்பார்ந்த தோழர்களே,

27.11.2014 அன்று நடைபெற்ற வேலை நிறுத்தத்தின் கோரிக்கைகளின் மீது பிராந்திய தொழிலாளர் நல ஆணையர்(REGIONAL LABOUR COMMISSIONER (CENTRAL) திரு S.K.தாஸ், BSNL நிர்வாகம் மற்றும் JAC தலைவர்களுடன் 06.05.2015 அன்று பேச்சு வார்த்தை நடத்தினார். JAC சார்பாக அதன் அமைப்பாளர் தோழர் P.அபிமன்யு, தோழர் ஸ்வபன் சக்கரவர்த்தி Dy.GS, BSNLEU மற்றும் தோழர் சுரேஷ் குமார் GS BSNLMS ஆகியோரும், நிர்வாகத்தின் சார்பில் Sr.GM(SR), GM(ESTT) மற்றும் DGM(SR) ஆகியோரும் கலந்துக் கொண்டனர். 9 பிரச்சனைகளின் மீது நிர்வாகம் கீழ்கண்ட அறிக்கையினை கொடுத்தது.

1) **RM, Gr.D, தொழிற்சாலை ஊழியர்கள் போன்ற கேடர்களின் தேக்க நிலை:-** இதனை முன்னர் பரிசீலித்த அதே குழுவிற்கு மீண்டும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. அதன் பரிந்துரைகள் வந்த பின் தேவையான உத்தரவுகள் பிறப்பிக்கப்படும்.
2) **01.01.2007க்கும் முன்னும் பின்னும் பணியமர்த்தப்பட்ட ஊழியர்களுக்கு இடையேயான ஊதிய சமமின்மை (Wage disparity) நீக்குதல்:-** 01.01.2007 முதல் 07.05.2010 வரை பணி அமர்த்தப்பட்டவர்களுக்கு ஒரு கூடுதல் ஆண்டு ஊதிய உயர்வு தொகை வழங்கலாம் என்கிற முன்மொழிவு BSNL இயக்குனர் குழுவின் பரிசீலனையில் உள்ளது. மனித வள திட்டம் அங்கீகரிக்கப்பட்ட பின் இந்த முன்மொழிவை மீண்டும் சமர்ப்பிக்கும் படி சமீபத்திய இயக்குனர் குழு தெரிவித்துள்ளது.
3) **NEPP அமுலாக்கத்தில் நிர்வாகம் ஏற்படுத்திய தடங்கல்களின் தீர்வு:-** இந்த பிரச்சனை பரிசீலிக்கப்படும்.
4) **இலாகா தேர்வுகளில் SC/ST ஊழியர்களின் அளவீட்டை குறைத்து கணக்கிடவேண்டும் என்கிற DOP&T உத்தரவை அமுலாக்க வேண்டும்:-** இந்த பிரச்சனையில் DOP&T பிறப்பித்த வழி காட்டுதல்களை BSNL நிர்வாகம் பின்பற்றுகிறது. எந்த DOP&T உத்தரவுகளை BSNL அமுலாக்கவில்லை என தொழிற்சங்கங்கள் சுட்டிக்காட்டுகின்றன என்பது தெளிவாக இல்லை.
5) **நேரடி நியமன ஊழியர்களுக்கு 30% ஓய்வூதிய பலன்கள் வழங்குவது:-** கடந்த இயக்குனர் குழுக் கூட்டத்தில் இதனை இயக்குனர் குழுவின் REMUNERATION COMMITTEEக்கு பரிந்துரைப்பது என முடிவு செய்யப்பட்டுள்ளது. அதன் முடிவுகள் எதிர்பார்க்கப்படுகிறது.
6) **புதிய போனஸ்(PLI) பார்முலா உருவாக்கி PLI வழங்குவது:-** செயல்பாட்டுடன் தொடர்புடைய PLI திட்டம் உருவாக்கும் குழுவின் கூட்டம் 23.07.2014 அன்று நடைபெற்ற போது PLI உடன் இணைக்கும் வண்ணம், ஒரு ஒட்டு மொத்த நிறுவனத்தின் வியாபார இலக்கை அடைவதில் ஊழியர்களின் பங்கை கணக்கிடுவதற்கான ஒரு சில அளவீடுகளை தொழிற்சங்க பிரதிநிதிகளிடம் நிர்வாகத்தின் சார்பில் கொடுக்கப்பட்டது. கடந்த நான்கு வருடங்களுக்கான இந்த

அளவீடுகளை ஊழியர் தரப்பு உறுப்பினர்கள் கேட்டனர். அதனையும் நிர்வாகம் கொடுத்துள்ளது. அடுத்த கூட்டம் 12.03.2015 அன்று நடைபெற்று உள்ளது. இந்த பிரச்சனை விவாத நிலையிலேயே உள்ளது. அடுத்த கூட்டத்தில் மேலும் விவாதம் நடைபெறும்.

7) **LTC, LEAVE ENCHASHMENT மற்றும் MEDICAL ALLOWANCE மீண்டும் வழங்குவது**:- நிறுவனத்தின் எதிர்மறை பொருளாதார நிலை காரணமாக ஒரு சில வசதிகள் திரும்ப பெறப்பட்டுள்ளன. நிறுவனத்தின் பொருளாதார நிலைமை குறிப்பிடத்தக்க வகையில் மேம்படவில்லை. BSNLல் இணையாத ITS GROUP A அதிகாரிகளை பொறுத்த வரை அமைச்சரவை முடிவின் அடிப்படையில் அவர்களுக்கு அலவன்ஸ்களும் வசதிகளும் தரப்பட்டு வருகிறது.

8) **ஊழியர்களின் பெயர் மாற்றம்**:-அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் நிர்வாக தரப்பு உள்ளடங்கிய ஒரு குழு இது தொடர்பாக விவாதித்து வருகிறது. ஒரு சில முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளது. அடுத்த கூட்டத்தில் மேலும் விவாதிக்கப்படும்.

9) **E-1 ஊதிய விகிதம் அமுலாக்கம்**:- BSNL-ன் மனித வளத் திட்டம் அங்கீகரிக்கப்பட்ட பின் இந்த முன்மொழிவை மீண்டும் சமர்ப்பிக்கும் படி இயக்குனர் குழு தெரிவித்துள்ளது.

**JAC தேவையானால் ஊதிய உடன்பாட்டை மாற்றி அமைத்தாவது RM, Gr.D மற்றும் தொழிற்சாலை ஊழியர்களின் தேக்க நிலை பிரச்சனையை தீர்வு காண வேண்டும் என கடுமையாக வாதிட்டனர்.** 78.2% பஞ்சப்படி இணைப்பு வழங்கப்படும் போது நிர்வாகத்தால் ஊதிய உடன்பாடு ஏற்கனவே மாற்றியமைக்கப்பட்டது என்பதையும் அவர்கள் சுட்டிக் காட்டினார்கள். **தேக்க நிலை பிரச்சனை மற்றும் கோரிக்கை சாசனத்தில் உள்ள இதர பிரச்சனைகளின் மீது JACயுடன் விவாதிக்க நிர்வாக தரப்பில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.** இருதரப்பு சந்திப்பிற்கு பிறகு அதில் ஏற்பட்ட முன்னேற்றங்களை நிர்வாகமும், தொழிற்சங்கங்களும் தெரிவித்த பின்னர் அடுத்த கட்ட பேச்சுவார்த்தைக்கு தொழிலாளர் நல ஆணையம் ஏற்பாடு செய்யும் என இந்தக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

**அடுத்த கட்ட பேச்சுவார்த்தை நல்ல தீர்வை தரும் என எதிர்ப்பார்ப்போம். இல்லையெனில் மீண்டும் ஒரு போராட்டத்திற்கு தயாராவோம்.**

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**

**மாநில செயலாளர்**